முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 261/2020

இன்று 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விசாலாட்சி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ரவி | கிராமம் | : |
| வயது | : 56 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 29-10-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. எனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் எழுத தெரியாது. ஆனால் ஓரளவிற்கு படிக்கத் தெரியும். எனக்கு எந்த ஆண்டு திருமணமானது என்றால் கடந்த 1985 ம் ஆண்டு திருமணமானது. எனது திருமணத்தை என் பெற்றோரும், சகோதரரும் சீர்வரிசை கொடுத்து நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தனர் என்றால் சரிதான். சண்முகசுந்தரம் என் தம்பி இந்த வழக்கு சொத்தில் தான் குடியிருந்தார் என்றால் சரிதான். அவருக்கு திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான்.

2. என் அப்பாவிற்கும், என் சகோதரரும், செல்வி என்பவருக்கும் இடையே தகராறு இருந்தது என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறானது என்றால் சரியல்ல. என் சகோதரரும் என் அப்பாவிற்கும் இடையில் தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. தற்சமயம் அவர் சேலத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை ஆதியில் 1961 ம் ஆண்டு சுப்பண செட்டியார் என் தாத்தா பெயரில் கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான். அவர் காலமான பிறகு 1982 ம் ஆண்டு என் தாத்தாவின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். என் அப்பாவும் அவரது அண்ணன் பாலசுப்பிரமணியமும் வாரிசுப்படி 1982 ம் ஆண்டு பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

3. என் அப்பா இறக்கும் வரை நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தார் என்றால் சரிதான். என் அப்பா எனக்கு கிரயம் செய்து கொடுத்தபோது நல்ல மனநிலையில் இருந்தார் என்றால் சரிதான். 2016ம் ஆண்டு செட்டில்மெண்ட் ஏற்பட்டபோது வாதி தாவா சொத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. என் அப்பா குடியிருந்து வந்தார். யாருடன் இருந்தார் என்றால் வாதியுடன் இருந்தார் என்றால் சரியல்ல. தனியாக இருந்தார். கூத்தம்பாளையத்தில் இருந்தார்.

4. செட்டில்மெண்ட் ஏற்பட்டபோதே என் அப்பா சுவாதீனம் கொடுத்துவிட்டார் எற்ால் சரியல்ல. வருவாய்த்துறை ஆவணங்களான பட்டாவில் வாதியின் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் சரியல்ல. நான் என் அப்பாவிடம் கிரயம் பெற்ற 900 சதுரடி இடத்தின் மதிப்பு ரூ. 27 லட்சம் என்றால் சரிதான். ரூ.4,90,000/-ஐ எங்கு வைத்து என் அப்பாவிற்கு கொடுத்தேன் என்றால் சொல்ல முடியாது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.10.29 15:42:56 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.